நாள் : 07.06.2024

<u>அசல் வழக்கு எண்: 124/2016</u>

**வா.சா.-1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

இவ்வழக்கின் 3 ம் பிரதிவாதி தமிழரசன் எனது இளைய மகன் ஆவார். எனது மூத்த மகன் பெயர் ராஜசேகரன். அவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

இளைய மகன் எந்த சொத்துக்களை கொடுத்தேன் என்றால் எனக்கு படிக்க எழுத தெரியாது . தமிழரசனுக்கு ஒதுக்கப்பட்ட வீடு நிலங்களை விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். தமிழரசனுக்கு கொடுக்கப்பட்ட விவசாய நிலங்களை விற்பனை செய்ய வில்லை. தமிழரசனுக்கு விவசாய நிலத்தை கொடுத்த அதிலிருந்து வரும் வருமானத்தை எனக்கு கொடுக்கும்படி சொன்னேன் அவர் கொடுக்க மறுத்துவிட்டார்.

எனது பெயரிலுள்ள நிலத்தை தமிழரசன் என்னிடம் கொடுக்க மறுத்துவிட்டார். எனது சம்மந்தி ராஜேஷ்வரிக்கு வேறு ஆண் துணை இல்லை சரிதான். அவருடைய குடும்ப வரவு செலவுகளை எனது மகன் தமிழரசன் தான் பார்த்து வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எனது வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் தாவா சொத்தை பொறுத்து வழக்குக்கு சம்மந்தம் இல்லாத சாந்தி என்பவர் ஆவணம் ஏற்படுத்தி கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. எனது மகன் 1 ம் பிரிவாதி 3 வது நபருக்கு விற்பனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த 3 வது நபர் யாரென்று தெரியுமா என்றால் தெரியாது.

இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாந்தி என்பவர் எனது ஊரை சேர்ந்த நபர் ஆவார். உறவினர் அல்ல. ஏன் எனது சொந்தமான சொத்தை ஆக்கிரமிப்பு

செய்தீர்கள் என்று அவர்களிடம் கேட்டேனா என்றால் இல்லை. அது சம்மந்தமாக பஞ்சாயத்து எதுவும் நடக்க வில்லை. சொத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசியதாகவும் பிரதிவாதிகள் சொத்தை தர மறுத்ததாகவும் எதிர்வழக்குரையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

தாவா சொத்து எனது மகன் தமிழரசனுக்கு பாக பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல நான்தான் அவரிடம் கொடுத்து வருமானத்தை தரும்படி சொன்னேன். கடந்த 19.01.2007 ம் வருடம் 3 ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை ஒப்படைத்து விட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எனது மகன் தமிழரசன் அடிக்கடி வெளிநாடு சென்று வந்ததால் அவரது பெயருக்கு ஆவணத்தை மாற்றிக்கொண்டு 1 மற்றும் 2 பிரதிவாதிக்கும் கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததாக கூறிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது, பட்டா எண் தெரியாது.

தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வந்ததற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் கிஸ்தி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல கடந்த 19.01.2007 ம் தேதி எனது மகன் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது அதனடிப்படையில்தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் 3 ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் எவ்வித பரிகாரங்களும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,

District Munsif

Mannargudi